# விடியல்

## The Dawn

இதழ்-87, ஜூலை-2016

கௌரவ ஆசிரியர்
முனைவர் வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்
முனைவர் சி. ஆர். சுரேஸ்
துறைத்தலைவர்

இணையாசிரியர்
முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு
திரு. வீ. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. ரவிச்சந்திரன்
முனைவர் ந. சங்கீதா
திரு. செ. தங்கராஜ்
திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதிபா
திரு. சத்தியராஜ்
திரு.சிலம்பரசன்

### தலையங்கம்

### மரணப்படுக்கைக்கான நேர்வழி

மனிதகுலம் ஒரு எதிர்மறையான சிந்தனையோட்டத்தில் நிதானமற்றுத் தடம் புரண்டு கொண்டிருக்கிறது. இல்லையில்லை தள்ளாடிக் கொண்டிருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்து வந்தாலும் மது எனும் விஷச் செடியை வெட்டி எறிய முடியவில்லை.

பண்டைக் காலத்தில் நம் மூதாதையர் மது உண்டு சீரான வாழ்க்கையை நடத்தி வந்தனர் என்றும் மதுப்பழக்கம் அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் இன்றைய காலத்தில் அதுவே ஒரு சமூகத்தின் சீர்கேடாக அமைந்திருக்கிறது.

மதுவை ஏற்றுக்கொண்ட காலம் ஒன்று இருந்தாலும் மதுவை விட்டொழியச் சொன்ன காலமும் உண்டு. அதுதான் நீதி இலக்கிய காலம் அதாவது திருக்குறள் முதலான அற நூல்களின் தோற்றக் காலம். இவ்வாறாக தமிழ் மரபில் பல ஏற்ற இறக்கங்களை மது வழியாகக் காணலாம்.

அக்கொடிய பழக்கம் இன்று பல

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
தமிழ்த்துறை,
கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு—637215. தமிழ்நாடு, இந்தியா.
Fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in E-mail: vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

குடும்பங்களை அழித்து வருகின்றது. மதுவிலக்குக் கொள்கைகளை இந்தியாவின் பெருவாரியான மாநிலங்கள் கடைபிடித்துவிட்டன. பெரிதளவில் மாற்றம் ஏற்படவில்லை. காரணம் அவையெல்லாம் தற்காலிக வாக்கு வங்கிக்காக ஏற்படுத்தப்படுகின்ற மாயவித்தையாகும். தனது குடும்ப மானத்தையும் கௌரவத்தையும் காக்க வேண்டிய இல்லறத் தலைவன் தெருவில் அலங்கோலமாகக் கிடக்கும் காட்சியைக் கண்டு எந்த பெண்தான் நிம்மதியாக இருப்பாள். இந்நிலை இன்னும் எத்தனை நாள், ஆண்டுகள் தொடரும்? இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது யார்?

மதுவிலக்கினை முழுமையாகக் கொண்டு வரும் பொழுது அந்நாடு அதற்கு எதிர்மறையான சில எதிர்வினைகளைச் சந்திக்கவும் நேரிடுகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், மெத்தனால் கலத்தல் முதலான முறைகேடான காட்சிகளும் அரங்கேறத் தொடங்கிவிடுகின்றன. இதனால் ஏராளமான உயிர்ச்சேதங்கள் நிகழ்ந்துள்ளதை புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்தியாவில் பல ஆண்டுகளாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்திய மாநிலம் குஜராத். ஆனால் அம்மாநிலத்தில் குடும்பம் சார்ந்த பிரச்சனைகளால் உயிரிழந்தோர் ஏராளம் என புள்ளிவிவரக் கணக்கு காண்பக்கிறது காலச்சுவடு இதழ். ஒரு மாநிலம் பூரண மதுவிலக்கைக் கொண்டு வருகின்றது என்றால் அதன் அண்டை மாநிலங்களும் அவ்வாறு சட்டம் கொண்டு வந்தால் தான் சாத்தியம் ஆகும். இல்லையெனில் இரு மாநிலப் பாதுகாப்பு, இருமாநிலப் பிரச்சனைகள் எழும். இதற்கு நல்ல உதாரணமாக கேரளாவில் மதுவிலக்குக் கொள்கை அமலுக்கு வந்ததும் அம்மாநில அரசாங்கம் கேரள மாநிலத்தின் எல்லையில் உள்ள தமிழ்நாட்டின் சாராயக்

கடைகளை மூட வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இதனால் அம்மாநிலம் இக்கொள்கையில் இன்று ஓரளவு வெற்றியடைந்து கொண்டிருக்கிறது. இன்றைய தமிழக அரசும் படிப்படியாகக் மதுவிலக்குக் கொண்டு வரப்படும் என்கிற வாக்குறுதியையும் அளித்துள்ளது சற்று சிந்தனைக்குறியது. ஏற்கெனவே பூரண மதுவிலக்கினைக் கொண்டு வந்த பல நாடுகள் அல்லது இந்திய மாநிலங்கள் அக்கொள்கையினின்று பின்வாங்கிய வரலாற்றைக் காணமுடிகிறது. படிப்படியாகக் குறைத்தல் எனும் கொள்கை ஏற்புடைத்ததே என்றாலும் அதற்கான எதிர்வினைகளே இன்றைய தமிழக்த்தில் நிரந்தரம் பிடித்துவிடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது

*வாரத்தில் ஒருநாள் மதுவிலக்கை அமல்படுத்துதல்*

*மதுவிற்பனைக் கூடங்களுக்கு வரையறைக்குட்பட்ட வேலை நேரம்*

*மதுக்கடைகள் அமைக்கப்படும் இடங்களைப் பெறுத்த அளவில் கண்டிப்பான கட்டுப்பாடு, சட்ட ரீதியாக வயது குறைந்த நபர்களுக்கு மதுவை விற்கும் நபர்கள் மீது கடுமையாக நடவடிக்கை, மது அகங்களை மூடுதல்*

*மதுவின் சில்லறை விற்பனையை வரைமுறைப்படுத்துதல்*

எனப் பல்வேறு நடவடிக்கைகள் குறித்துச் சுட்டிக்காட்டுகிறது காலச்சுவடு இதழ். தத்தமது கணவரின் வாழ்க்கையால் தன் குடும்பமே சீரழிவைச் சகிக்க முடியாத பெண்கள் தான் இன்று மதுவிலக்கு வேண்டும் என்று போராடுகின்றனர். அவர்களின் உணர்வைப் புரிந்து செயலாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையென்று முடித்தலை விட நம் அனைவரின் பொறுப்பு என்றுரைத்தலே சரி.

# உள்ளுறை


*கவிதைகள்------------------------------------ 8-19*

*பழமொழி----------------------------------------- 06*

*காமராசர் கவிதை------------------------- 05*

*காமராசர் கட்டுரை--------------------- 20 - 25*

*போதிமரம் ---------------------------------- 26*

*கமலக்கண்ணன் கவிதைகள்-------------- 29*

# கர்ம வீரர்

விருதுநகரில் பிறந்த வீரசிங்கமே
உன் சாதனைகள் தான் எண்ணி முடியுமோ?
நாட்கள் பல நகர்ந்தாலும்
காலங்கள் சில ஓடினாலும்
உன் புகழ்தான் மாறுமோ?
படிப்பறிவில்லாத மக்களுக்கு
நீ கல்விக்கண் திறந்தாய்
உணவில்லாமல் வாடிய மக்களுக்கு
மதிய உணவு வித்திட்டாய்..
பகட்டாய் திரியும் தலைவர்கள் மத்தியில்
ஒரு பாமரமகனைப் போல் வாழ்ந்தாய்
அரசியல் எனும் கடலில்
கிடைத்த பவளமே
அரசியலை வியாபாரமாகவும்
மக்களை அடிமைகளாகவும்
பார்ப்பவர்கள் மத்தியில்
யாதும் ஊரே யாவரும் கேளிர்



என்ற வாக்கின்படி வாழ்ந்து காட்டிய கர்மவீரரே..!
உன்னால் தான் ஓரளவு நிம்மதி காண்கிறோம்
கருணையின் சிகரமே
உன்னைப் போல் இன்று வரை யாருமில்லை
இனி யாரும் இருக்கப் போவதில்லை..!

*சி.சரண்யா ஆர்.ஜே*
*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## பழமொழி – கடந்த இதழின் தொடர்ச்சி

151)விதியை யாரால் வெல்ல முடியும்
152)விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும்
153)விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு
154)வினை விதைத்தவன் வினையறுப்பான்
155)வீட்டிற்கு வீடு வாசற்படி
156)வீரனுக்குச் சாவு ஒரு முறை, கோழைக்குச் சாவு தினமும்
157)வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்
158)வெளுத்ததெல்லாம் பாலாகுமா? கருத்ததெல்லாம் தண்ணீராகுமா?
159)வெறுங்கை முழம் போடுமா?
160)வெறுங்கை என்பது மூடத்தனம். விரல்கள் பத்தும் மூலதனம்
161)வேண்டாப் பொண்டாட்டி கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்
162)வேலியே பயிரை மேயலாமா?
163)வெறுங்காதுக்கு ஓலைக்காது மேல்
164)வெறுவாயை மெல்பவனுக்கு அவல் கிடைத்தது போல்
165)சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்
166)முதல் கோணல் முற்றும் கோணல்
167)முயல் பிடிக்கிற நாயை முகத்தைப் பார்த்தால் தெரியும்
168)செல்லாக்காசு திரும்பியே தீரும்
169)நச்சு மரம் நற்கனி ஈனாது
170)ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்
171)ஆண்மையற்ற வீரன்ஆயுதத்தைக் குறை சொல்லுவான்
172)அள்ளிக் கொடுத்தா சும்மா, அளந்து கொடுத்தா கடன்
173)கழுதை விட்டையானாலும் கைநிறைய வேண்டும்
174)வாய்ப்பில்லா திறமையும் சாதிக்காது

175)ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்
பாடிக்கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும்

176)கோழி கறுப்பு என்றால் அதன் முட்டையும் கறுப்பா?

177)கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது

178)மனம் மலர்ந்தால் முகம் மலரும்

179)அற முறுக்கினால் அற்றுப் போகும்

180)நெருப்பிற்குக் காற்று போல அன்புக்கு பிரிவு

181)அகல இருந்தால் நிகள உறவு

182)கோழிக்குக் குஞ்சு பாரமா? கொடிக்குக் காய் பாரமா?

183)ஒருமுறை விழுந்தால் தெரியாதா?

184)சாது மிரண்டால் காடு கொள்ளாது

185)புலி பதுங்குவது பாய்வதற்குத்தான்

186)அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது

187)துப்பட்டியில் கிழிந்த துண்டு



188)ஆழம் தெரியாமல் காலை விடாதே

189)மருந்தும் விருந்தும் மூன்று பொழுது

190)உடைந்த சங்கு ஊது பரியுமா?

191)அழுத பிள்ளை பால் குடிக்கும்

192)பேச்சை விட செயலே ஓங்கி நிற்கும்

193)துன்பம் ஒழுக்கத்தின் உரைகல்

194)ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைத்திருக்கிறேன்

195)மலையைத் துளைக்க சிற்றுளி போதாதா?

196)கற்பில்லாத அழகு வாசமில்லாப் பூ

197)முகம் சந்தி பிம்பம் அகம் பாம்பின் விஷம்

198)செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு

199)ஓடம் விட்ட ஆற்றிலும் அடி சுடும்

200)பேச்சு கற்ற நாய் வேட்டை பிடிக்காது

A.மேனகா
வணிக கணினிப்பயன்பாட்டியல் இ பிரிவு

## ஆண் என்பவன்

ஆண் அழத் தெரியாதவன் அல்ல
கண்ணீரை விழுங்கத் தெரிந்தவன்
அன்பில்லாதனவன் அல்ல
அன்பை மனதில் வைத்து
சொல்லில் வைக்கத் தெரியாதவன்
வேலை தேடுபவன் அல்ல
தன் திறமைக்கான அங்கீகாரத்தைத் தேடுபவன்
பணம் தேடுபவன் அல்ல
தன் குடும்பத்தின் தேவைக்காக ஓடுபவன்
சிரிக்கத் தெரியாதவன் அல்ல
நேசிப்பவர்களின் முன்
குழந்தையாய் மாறுபவன்..
காதலைத் தேடுபவன் அல்ல
ஒரு பெண்ணிடம் தன்
வாழ்க்கையைத் தேடுபவன்..
கரடுமுரடானவன் அல்ல
நடிக்கத் தெரியாமல்
கோபத்தைக் கொட்டிவிட்டு வருந்துபவன்..
மொத்தத்தில் அவன் அவனாக
இருப்பதல் தான்
அவன் பெயரே ஆண் என்றானது...



R.கார்த்திக்
கணினி அறிவியல் இரண்டாமாண்டு இ பிரிவு

## அம்மா

மறுமுறை உந்தன் கருவறை வேண்டும்
முழுவதும் துறந்து முழுமையாக
உன்னில் சங்கமமாக
மறுபடி என்னை மடியினில் சுமப்பாயா..?
தாயின் கருவறையைப் பார்த்த பின்பு
ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்..
இருள் நிறைந்து இருப்பது
நரகம் மட்டுமல்ல
சொர்க்கமும் தான் என்று..




*S.ரஞ்சித்குமார்*
*கணினி அறிவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு*

## தாய்மொழித் தாலாட்டு

தொட்டிலை ஆட்டுவது தவறல்ல
தயவுசெய்து பிள்ளைகளைக் கிள்ளி விடாதீர்கள்
அவரவர்தம் வீடுகளில்
ஆடட்டும் தொட்டில்கள் அளவாக..
அரசாங்கத் தொட்டில்கள் காலியாய்க்
கிடக்கட்டும் தனியாக..
கொஞ்சம் பறவைகளே
நீங்கள் பெற்ற குழந்தைகளுக்கு
நீங்களே கூடுகட்ட வேண்டாமோ?
சுகங்களை மட்டுமே
சொந்தமாக்கிக் கொள்கிறீர்

அதன் சின்னங்களை மட்டும்
நகங்கள் என்று நீர்
நறுக்கி எறிவதோ.?
வீணைகளை மீட்டி ரசிக்கும நீங்கள்
அதன் ஸ்வரங்களை மட்டும்
அபஸ்வரம் என்பதோ..?
அவரவர் வீடுகளில்
ஆடட்டும் தொட்டில்கள் அளவாக
அரசாங்க தொட்டில்கள்
காலியாய்க் கிடக்கட்டும் தனியாக..

*கே.யுவராணி*
*கணினி அறிவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு*

## முயற்சியும் நட்பும்

முயற்சி என்பது விதை போல
அதை விதைத்துக் கொண்டே இரு
முளைத்தால் மரம்
இல்லையென்றால் அது
மண்ணிற்கு வரம்

## நண்பன்

என்னைவிட நல்ல நண்பனை
நீ கண்டுபிடித்தால்
பிரிந்து போ..
உன்னைத் தடுக்க மாட்டேன்..
ஆனால் அவன்
உன்னைப் பிரிந்து சென்றால்



திரும்பிப்பார்

அப்போதும் உனக்காகக் காத்திருப்பேன்

அதே நட்போடு..

சாகும் வரை காதலிக்குச்

செருப்பாக இருப்பதைவிட

வாழும்போது ஒரு நண்பனுக்கு

ஏணியாக இருக்கலாம்..

*V.விஜயராகவன்*
*கணிதவியல் இரண்டாமாண்டு அ பிரிவு*

காவியா கவிதைகள்
கணிதவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு

**பிரிவின் துயர்**

அடிவயிற்றில்

அமிலம் சுரக்கும் உணர்வு

நெஞ்சுப் பகுதிக்குள்

நிலநடுக்கம் வந்த அதிர்வு



தொண்டைக்குழியில்

துளிநீரின்றி துவளும் தவிப்பு..

இலைகள் கிளைகளைவிட்டு

உதிர்வது போல்

இதயத்தைவிட்டு ஏதோ

நழுவுவது போன்ற துடிப்பு

நடந்தவைகள் அனைத்தும்

நினைவுகளாகி துயர்தருதே

இதுதான் பிரிவின் வலியா..?

இதயமது இல்லாதது போலாகுதே

இதுதான் பிரிவின் துயரா..?
பூக்களின் வாசத்தை
நுகரும் நெஞ்சம்
சிறுமுள் குத்தலில் துடிப்பது போல்
பாசத்தின் பிடிப்பைப்
பற்றிக்கொள்ளும் மனம்
சிறுபிரிவில் கூட துடிக்கிறதெ..
வாழ்க்கையில் பல பிரிவு
சில பிரிவு சிலாகிக்கிறது
சில பிரிவு சிக்கலாக்குகிறது
சில பிரிவு சிந்திக்க வைக்கிறது
சில பிரிவு கண்ணீர் சிந்த வைக்கிறது..
பிரிவுகளின் பட்டியலில்
பலவகையிருந்தாலும்
அதன் வலிகளின் ரணங்கள்
ஆழ்மனதைக் காயப்படுத்தாமல்
இருப்பதேயில்லை..
அதனால்தானோ என்னவோ
எந்நிலையிலும் எப்பிரிவையும்
எந்த உள்ளமும்
விரும்புவதேயில்லை..

## நிம்மதியென்னும் வெளிச்சத்தில்

கடந்தவைகளில்
கசப்பானவைகளைக் கடத்திவிட்டு
மனதைவிட்டு வெகுதூரம்..
நடந்தவைகளில்

கெட்டதைத் தவிர நினைத்துக் கொண்டிரு
நெஞ்சின் ஒரு தூரம்..
நாட்களில் ஏதுமில்லை
நல்ல நாள்
கெட்ட நாளென்று..
நேரத்தில் ஏதுமில்லை
நல்ல நேரம்
கெட்ட நேரமென்று
எல்லா நாட்களும்
நல்ல நாட்களே
என்றெண்ணும் மனமிருந்தால்
எல்லா நேரமும்
நல்ல நேரமே
என்றெண்ணும் தெளிவிருந்தால்
எந்நாளும் பொன் நாளே!
எந்நேரமும் பொன் நேரமே!
நேற்றைய நினைவுகளில் மூழ்காதே
நாளைய கனவுகளில் பறக்காதே
இன்றைய நிஜத்தில்
வீறுகொண்டு வேகமாய் நட..
வெற்றி உன்னிடம்




## தன்னம்பிக்கை

விழுவது ஒன்றும் தோல்வியல்ல
எல்லாமே விழுந்தாக வேண்டும்
விழுந்து எழாமல்
இருப்பதே தவறு..

அப்படியே விழுந்தாலும்

காய்ந்து விழும்

சருகைப் போல இருக்க வேண்டும்

விழுந்தாலும பிறருக்கு

உதவுவது போல..

வெற்றி மனதிருப்தியைக் கொடுக்கும்

ஆனால் தோல்வி

மன உறுதியைக் கொடுக்கும்..



தோல்வியென்னும்

அக்னிக்குள் வெந்து

வெற்றியென்னும்

அன்னத்தை உண்..

*ம.சௌமியா*

*கணிதவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு*

செ.மனிஷா படைப்புகள்

கணிதவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு

## இழப்பு

அதிகமாகப் பேசினால்

அமைதியை இழப்பாய்

ஆணவமாகப் பேசினால்

அன்பை இழப்பாய்

வேகமாகப் பேசினால்

அர்த்தத்தை இழப்பாய்

கோபமாகப் பேசினால்

குணத்தை இழப்பாய்

வெட்டியாகப் பேசினால்

வேலையை இழப்பாய்..

வெகுநேரம் பேசினால்

பெயரை இழப்பாய்

பெருமையாகப் பேசினால்

ஆண்டவனின் அன்பை இழப்பாய்..

**அன்பு**

இந்த உலகில் நாம்

நம் கண்முன்னால் காணும்

ஒவ்வொருவரையும்

நேசிக்க இயலவில்லை என்றால்

கண்ணுக்குத் தென்படாத

கடவுளிடம் எவ்வாறு

அன்பை செலுத்த முடியும்..?

**மலர்ச்சி**

பூக்களாக இருக்காதே

உதிர்ந்து விடுவாய்

செடிகளாக இரு

அப்போது தான்

பூத்துக்கொண்டே இருப்பாய்..



கனியாக இரு

அப்போது தான் பேச்சில்

மலர்ச்சி பொங்கிக் கொண்டே இருக்கும்..

**தன்னம்பிக்கை**

வெற்றியோ தோல்வியோ

எதுவரினும்

கடமையைச் செய்வோம்

யார் பாராட்டினாலும்
பாராட்டாவிட்டாலும்
கவலை வேண்டாம்
நமது திறமையும் நேர்மையும்
வெளியாகும் போது
பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்

**வெற்றி**

ஒருவன் உன்னைத்
தாழ்த்திப் பேசும் போது
ஊமையாய் இரு..
புகழ்ந்து பேசும் போது
செவிடனாய் இரு..
எளிதில் வெற்றி பெறுவாய்..

## பெண் குழந்தை

மனிதர்கள் கடலில் மிதப்பார்களாம்
வானத்தில் பறப்பார்களாம்
உட்கார்ந்த இடத்திலே
உலகைப் பார்ப்பார்களாம்
சர்வ வல்லமை கொண்ட
மனிதர்களைக் காண
கடவுளிடம் வரம் வாங்கி
தாயின் கருவறையில் தங்கி
உலகைக் காண
வெளியே வந்தேன்..
கண்விழிக்கும் முன்

என் மூச்சுக் குழாயை நிரப்பிய
நச்சுக் காற்றால்
நுரையீரல் திணறியது..
வீல் என அழுதேன்
ஓடி வந்த சில முகங்கள்
உற்றுநோக்கி உச் கொட்டின
பெண், கருப்பு...
இன்னும ஏதேதோ சொன்னார்கள்
எதுவும் எனக்குப் புரியவில்லை.
சண்டாளி சனியனைப்
பெற்றுத் தொலைத்தாளே
தலை நரைத்த பெண்ணொருத்தி
சபித்துவிட்டுச் சென்றாள்
கொன்று தொலைத்துவிட்டு
வீடு வந்து சேர்
சொன்னது என் தகப்பனாம்..
என் வரவு யாரையும்
மகிழ்விக்கவில்லை



உறவினர்களின் முகம் சொன்னது
கருவறையின் கதகதப்பை
தேடியது உடல்
கை கால் உதைத்து அழுதேன்
பத்து மாதம் சுமந்தவள்
அள்ளி எடுத்து அணைப்பாள் என..
விழியில் துளிர்த்த நீரை
விரலில் சுண்டியவள்

துணியில் சுருட்டியெடுத்தாள்..

நா.இந்துமதி
கணிதவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு

## மழை வர[ம்] வேண்டும்

கருவாச்சியின் முகம் சிரித்தால்தான்
மரம் செடி கொடிகளின் முகம் மலர்கின்றன
மரம் செடி கொடிகளின் முகம் மலர்ந்தால்தான்
காற்றின் முகம் மலர்கின்றது.
காற்றின் முகம் சிரித்தால்தான்
ஒரு விவசாயியின் முகம் மலர்கின்றது
விவசாயியின் முகம் சிரித்தால் தான்
நாடு மலர்கின்றது..



நாடு நன்றாக இருந்தால் தான்
இளைஞர்களிடையே கனவு மலரும்
கனவு மலர்ந்தால்
அப்துல் கலாமின் கனவு நிறைவேறும்..

**திரு.கிருஷ்ணமூர்த்தி**
அலுவலக உதவியாளர்-கணிதத்துறை

## சாதனைகள் சாத்தியமே

ஒரு சாதாரண மனிதன்
சாதனை மனிதனாக வேண்டுமெனில்
கண் என்ற இரண்டெழுத்திற்குள்
கனவுகளைப் பதித்து
எளிமை என்ற மூன்றெழுத்திற்கு
எடுத்துக்காட்டாக விளங்கி

முயற்சி என்ற நான்கெழுத்தை
மூச்சாகக் கொண்டு
புத்தகம் என்ற ஐந்தெழுத்துப்
புதையலை வாசித்து
விடாமுயற்சி என்ற ஆறெழுத்தை
விடாமல் பிடித்து
தன்னம்பிக் என்ற ஏழெழுத்தைத்
தன்னுள் கொண்டு
கற்பனைத்திறன் என்ற எட்டெழுத்தைக்
கடலளவு கொண்டு
எதிர்மறை எண்ணம் என்ற ஒன்பதெழுத்து
எதிரியை வென்று
மாபெரும் சாதனையாளர் என்ற பத்தெழுத்துப்
பட்டத்தை உன் பத்து விரலுக்குச்
சொந்தமாக்க இன்று முதல் உழைத்திடு
சாதனைகள் சாத்தியமே..



**மா.விஜய்**

ஆய்வியல் நிறைஞர் - வணிகவியல்

**எனது முதுமொழிகள்**

1)பொய்யான நட்பை வைத்துக்கொண்டு நண்பனாய் இருப்பதைவிட உண்மையான பகையை வைத்துக் கொண்டு பகைவனாய் இரு

2)நல்லவர்களுக்கு நடக்கின்ற கெட்டதும் கெட்டவர்களுக்கு நடக்கின்ற நல்லதும் அதிக நாள் நீடிக்காது

3)உண்மையான உழைப்பையும் கண்ணியமான கடமையையும் வெளிப்படுத்தும் ஒருவன் வெற்றியைத் தேடி செல்ல வேண்டியதில்லை. வெற்றி அவனைத் தேடி வரும்

4)ஒருவன் நல்லவனா கெட்டவனா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? அவனது மரணத்தைப் பார்.

5)அளவிற்கு அதிகமான பேச்சு, தூக்கம், உணவு இவை மூன்றும் உடலிற்கும் ஆபத்து உள்ளத்திற்கும் ஆபத்து.

6)எத்தனை முறை தோற்றாய் என்பதைவிட எத்தனை முறை முயற்சி செய்தாய் என்பதே முக்கியம்

7)வெற்றி பெற நினைப்பவன் போட்டியைப் பார்த்துப் பயப்படமாட்டான். போட்டியைப் பார்த்துப் பயப்படுபவன் வெற்றி பெற மாட்டான்.

தொகுப்பு - **மா.விஜய்**

ஆய்வியல் நிறைஞர் – வணிகவியல்

## கருப்புக் காந்தி

**முன்னுரை**

விரிந்த வானத்தில் சிதறிக்கிடக்கும் நட்சத்திரங்களை ஒவ்வொன்றாக விழிகளால் அளப்பது போல் காமராசரின் அரசியல் சாதனைகளை நான் தனியாகச் சிந்தித்துப் பார்க்கிறேன்.

**காமராசர் – பிறப்பு**


1903 ஜூலை மாதம் 15 ஆம் நாள் மானுடத்தின் பாவங்களைச் சுமக்க மனிதகுமாரன் மண்ணில் மலர்ந்ததைப் போல் வறுமையிருளில் வாடிக்கிடந்த நம்மை வாழ்விப்பதற்காகவே விருதுப்பட்டியில் காமராஜ் பிறந்தார்.

அவர் பிறந்த போது வானவீதியில் எந்த அதிசயமும் அரங்கேறவில்லை. நாட்டு மக்கள் கனவில் இரவில் வந்து இரட்சகர் பிறந்ததாய்த் தேவதூதர்கள் தெரிவிக்கவில்லை.

தேங்காய் வியாபாரி குமாரசாமிக்கும் எழுத்தறியாத சிவகாமி அம்மையார்க்கும் ஏழை மகனாய் சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட

சமூகத்தில் எந்தப் பாரம்பரியப் பின்னணியும் இல்லாமல் காமராஜ் பிறந்தார்.

தங்கமணி மாளிகையில்
தனிவயிரப் பந்தலிட்டு
மங்கையர்கள் சுற்றிவந்து
மங்கலமாய்க் கோலமிட்டுத்
திருநாள் அலங்காரச் சிலைபோல்
அலங்கரித்து
வாழத்தொலிக்கப் பெற்றெடுக்கும்
மகனாக வந்ததில்லை..
வண்ணமலர்த் தொட்டிலிலே
வடிவம் அசைந்ததில்லை!
மாமதுரை நாட்டில்
மறவர் படை நடுவில்
தேமதுரத் தமிழ்பாடும்
திருநாடார் தங்குலத்தில்
வாழையடி வாழையென
வந்த தமிழ்ப் பெருமரபில்
ஏழைமகன் ஏழையென
இன்னதுமே நீ பிறந்தாய்!
நிமிர்ந்தால் தலையிடிக்கும்
நிற்பதற்கே இடமிருக்கும்
அமைவான ஓர் குடிலில்
ஐயா நீ வந்துதித்தாய்..



**இளமைப் பருவம்**

காமராசர் திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று அதன் பின்னர் ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.

கல்வியோடு உணவளிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்குச் சென்று காமராசர் கல்வி கற்றார். காமராசர் தமது ஏழுவயதில் வந்தேமாதரம் என்று சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டார். அந்தச் சொல் அவரது ஆழ்மனதில் பதிந்துவிட்டது. அவரது உள்ளத்தில் விடுதலை வேட்கையும் சுடர்விடத் தொடங்கியது தனது பன்னிரண்டாவது வயதுடன் பள்ளிக்குச் செல்லவியலா நிலை ஏற்பட்டது.

**அரசியலில் ஈடுபாடு**

காமராசர் பள்ளி செல்ல இயலாதபோதும் நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும் அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும் தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார். மெய்கண்டான் புத்தகச்சால என்னும்நூல்நிலையத்திற்குச் சென்று லெனின், கரிபால்டி நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்துத் திறமையாகப் பேசவும் வாதம் புரியவும் தொடங்கினார்.

மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகென்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள்

சைமன் குழு எதிர்ப்பு, உப்புசச்சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றார். பதினோராண்டுகள் சிறையில் கழித்தார். அவரது தன்னலமற்ற உழைப்பைக் கண்ட தலைவர் சததியமூர்த்தி, காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தார். சத்திய மூர்த்தியைக்

*காமராசர் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். இவர் 1937 இல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

**தலைவர்களை உருவாக்குபவர்**

*1945 இல் பிரகாசம் 1947 இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949 இல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதவியேற்பதற்குக் காமராசர் காரணமாகஇருந்தார். நேருவின் மறைவிற்குப் பின் லால்பகதூர் சாஸ்திரியையும் லால் பகதூர் சாஸ்திரியின் மறைவிற்குப் பின் இந்திரா காந்தியையும் நாட்டின் நாட்டின் பிரதமராக ஆக்கியதில் பெரும்பங்கு வகித்தவர். அதனால் தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்பட்டார்.*

*உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*

**முதலமைச்சரை காமராசர்**

*1954 இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் காமராசர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963 இல் தாமாகப் பதவி விலகும் வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார்.*

*தொழில் முன்னேற்றம்*

*காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது, ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது தமிழகத்தில் பொருளியல் தொழில்துறைத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன. மின் திட்டங்கள் மிகுந்தன. சாலைகள் போடப்பட்டன. கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை முதலிய இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகளும் மாவட்டந்தோறும் சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பெற்றன. வேளாண்மைக்கான பாசன வசதிகள் செய்யப்பட்டன. அணைகள் கட்டப்பட்டன.*

இவர் காலத்தில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது. நெய்வேலி நிலக்கரிக் சுரங்கத் தொழிற்சாலை, உதகை இந்துஸ்தான் போட்டோபிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவை சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, மேட்டூர் பேப்பர் தொழிற்சாலை, பெரம்பூர் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை முதலியன காமராசர் ஆட்சியில் தொடங்கப்பட்டன.

கல்விப் புரட்சி

காமராசர் காலத்தில் கட்டாயக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. தெருதோறும் தொடக்கப்பள்ளி. ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி என்பதே அவரது நோக்கமாக இருந்தது. பள்ளி வேலைநாட்களை நூற்றெண்பதிலிருந்து இருநூறாக உயர்த்தினார். காமராசரால் தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படைப் பொருட்களும் கருவிகளும் பெறப்பட்டன.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

அன்னயாவினும் புண்ணியம் கோடி

ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல்

சமூக முன்னேற்றத் திட்டம்

தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார்.

நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது. நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது. நில முதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை

பிரித்தளிக்கப்பட்டன. மீனவர், கருப்பட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்களில் ஓய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகரப்புற வீடுகட்டும் திட்டம் இலவச மருத்துவ வசதி முதலியனவும் காமராசரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

**காமராசர் திட்டம்**

1962 ஆம் ஆண்டு சீனப் படையெடுப்புக்குப் பின் காங்கிரசு கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இடைத்தேர்தல்கள் சிலவற்றில் காங்கிரசு தோல்வியுற்றது. எனவே கட்சியை வலுப்படுத்த கட்சியின் மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபட வேண்டும் எனக் காமராசர் வலியுறுத்தினார அத்திட்டம் காமராசர் திட்டம் என அழைக்கப்பட்டது.

**காமராசருக்குச் செய்த சிறப்பு**

காமராசருக்கு நடுவணரசு பாரத ரத்னா விருது அளித்தும் நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலையை நிறுவியும் சிறப்பித்தது. தமிழக அரசு, இவரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டியது. கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது. சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் சிலையமைத்துச் சிறப்பித்தது. தமிழக அரசு காமராசர் பிறந்த நாளான சூலைப் பதினைந்தாம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது இவரைக் கல்விக் கண் திறந்தவர் எனத் தமிழகம் போற்றுகிறது.

**முடிவுரை**

தமிழன் எப்போதும் விரோதிகளால் அழிந்ததில்லை. துரோகிகளால் தான் அழிந்திருக்கிறான் என்று காமராசர் கூறுகிறார். நம்மால் முடிந்த உதவிகளை ஏழைகளுக்குச் செய்வோம்.


*க.அபியா*

*கணிதவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு*

## போதிமரம் - திருக்குறள்

தலைவி தனியாக நிற்றலலைக் கண்ணுற்ற தலைவைன் தானும் தனியாக வந்து செய்வதறியாது அவளது அழகில் மயங்கி ஐயுற்றுப் புலம்புவதாக தகையணங்குறுத்தல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் ஆக்கியுள்ளார். காமத்துப்பாலின் முதல் அதிகாரம் இவ்வாறு தனியாக நின்ற தலைவியைத் தனியாக வந்த தலைவன் பார்த்து மகிழ்வதாக அமைக்கப்பெற்றுள்ளது.

***அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை***
***மாதர்கொல் மாலும்என் நெஞ்சு (1081)***



இவள் தேவ மகளோ
சிறந்த அழகுடைய மயிலோ
நீண்ட தோட்டினை அணிந்த பூமகளோ
ஒன்றும் புரியாமல்
மயங்குகிறது என் நெஞ்சம்..!

**அருஞ்சொற்பொருள்**

அணங்கு – தெய்வம், ஆய்மயில் – சிறந்த மயில், கனங்குழை – நீண்ட காதணி, மாலும் – மயங்கும்.

***நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு***
***தானைக்கொண் டன்ன துடைத்து (1082)***

நான் பார்த்ததைக் கண்டு
அவளும் என்னைப் பார்த்த
பொழுது இருக்கிறதே...
எவரையும் தானாக கொன்றுவிடும் தெய்வம்

ஒரு பெரிய கூட்டத்தைக்

கொண்டு வந்து தாக்குதியது போலாயிற்று..

***பண்டறியேன் கூற்று என்பதனை இனியறிந்தேன்***

***பெண்தகையால் பேர்அமர்கட்டு (1083)***

எமன் என்பவனை இதற்கு முன்பு

நான் கண்டதில்லை

ஆனால் இப்பொழுது காண்கிறேன்..

அது பெண் எனும் வடிவில்

போர் செய்யக் கூடிய

நற்குணம் நிரம்பிய இரண்டு கண்கள் தான்..

**அருஞ்சொற்பொருள்**

பண்டு – முன்பு, பெண்தகை – நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு,

கூற்று – எமன், அமர் – போர்

***கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்***

***பேதைக்கு அமர்த்தன கண் (1084)***

பெண்மைக் குணம் மிக்கவள்


மென்மையானவள்

ஆனால்

பிறரின் உயிரைக் குடிக்கும்

அளவிற்கு உள்ளது அவளின் கண்கள்

ஏன் இந்த மாறுபாடு..?



**அருஞ்சொற்பொருள்**

அமர்த்தல் – மாறுபடுதல், பேதை – பெண்

***கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்***

***நோக்கம் இம்மூன்றும் உடைத்து (1085)***

என்ன அதிசயம்

இவளது கண்கள்

என்னை வருத்தும் எமனோ?

மண்ணுலகப் பெண்ணின் கண்ணோ?

வனத்தில் ஆடும் பெண்மானோ?

இம்மூன்றையும் பெற்றுள்ளதே..!

**அருஞ்சொற்பொருள்**

பிணை – பெண்மான், மடவரல் – அறியாப் பெண்

*அகரன் - தமிழ்த்துறை*

## காலாட்டுவது நல்லதாம்

சிலர் அமரும்போது காலாட்டிக் கொண்டேயிருப்பார்கள். அப்படி செய்யக் கூடாது நரம்புத் தளர்ச்சி வரும் என நிறைய பேர் சொல்லிக் காட்டிருப்பீர்கள். ஆனால் அது தவறில்லை என ஒரு ஆராய்ச்சி சொல்கிறது தெரியுமா?

காலாட்டிக் கொண்டிருப்பதால் ரத்தம் தடங்கலில்லாமல் செல்கிறது. தமனிகள் தொடர்பான நோய்கள் வருவதில்லை. குறிப்பாக இதய நோய்கள் வராது என கூறுகிறார்கள்.

ரத்தத்தை இதயத்திலிருந்து மற்ற உடல் பாகங்களுக்கும், மற்ற பாகங்களிலிருந்து இதயத்திற்கு அனுப்புவதிலும் தமனி பெரும் பங்கு வகிக்கின்றது. அதேபோல், ஆக்ஸிஜனை உடலுக்குள் செலுத்துவதிலும், கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியேற்றுவதிலும் முக்கிய பொறுப்பு தமனிக்கு உள்ளது. இந்த தமனிகளில் பாதிப்பு ஏற்பட்டால், இதய நோய்கள் ஏற்படுகின்றன.

வெகு நேரம் அமர்ந்து கொண்டேயிருப்பது ரத்த ஓட்டத்தை குறைக்கும். கால்களை ஆட்டிகொண்டே இருப்பதால், ரத்த ஓட்டம் அதிகரித்து, தமனிகள் ந்னறாக ஆரோக்கியமாக இருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஒரு காலை மட்டும் ஆட்டாமல் மாறி மாறி இரண்டு கால்களையும் ஆட்டுவதால் பயனளிக்கும் என்று கூறியிருக்கிறார்கள்.(எப்படியெல்லாம் ஆராய்ச்சி பண்றாங்கப்பா).

ஆனால் இது நடைப்பயிற்சிக்கோ, ஜாகிங்கோ ஒப்பாகாது. ஒரே இடத்தில் அமர நேர்கையில் அவ்வப்போது நடப்பது, நிற்பதும்தான் இதய நோய் பாதிப்புகளிலிருந்து விடுவிக்கும் என்று கொலம்பியாவின் மிசௌரி பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியர் ஜெளம் படில்லா கூறுகிறார்.

இந்த ஆய்வில் ஆரோக்கியமான இளைஞர்கள் 11 பேரை ஈடுபடுத்தினர். அவர்களை 3 மணி நேரம் தொடர்ச்சியாக அமர வைத்தனர். பாதி பேருக்கு கால்களை ஆட்டச் சொல்லியும் , பாதங்களை மெதுவாக தட்ட சொல்லியும் கேட்டனர். மீதியிருக்கும் பாதி பேரை சும்மாவே அமரச் செய்தனர்.

பின்னர் இவ்விரு குழுவையும் ஆராய்ந்ததில் காலையாட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு ரத்த ஓட்டம் அதிகமாகவும், தமனிகள் சீராகவும் இருந்தன. காலை ஆட்டாமல் அமர்ந்த குழுவிற்கு ரத்த ஓட்டம் மிகக் குறைவாகவும், நாளங்கள் சுருங்கியும் காணப்பட்டது.

அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது ஆரோக்கியமனதல்ல. அவ்வப்போது நடக்க வேண்டும். நடக்கும் வாய்ப்பில்லையென்றால் மாற்றுவழியாக காலாட்டிக் கொண்டிருப்பது நல்லது என படில்லா கூறினார்

## கமலக்கண்ணன் ஹைக்கூ

அடைமழை காலத்தில் மட்டும் தான்

புற்றீசல்களைப் பார்க்க முடிகிறது

தேர்தல்..!

நிழலில் அமர்ந்திருந்த போதுதான்

உணர்ந்தேன்..

வெயிலாய் காலம் நகர்ந்துகொண்டிருக்கிறது

நானும் புத்தன் தான்..

ஆளைக்காட்டுவதற்கு முன்பாகவே
ஆள்காட்டி விரலுக்காகக் காத்திருக்கிறது
கறுப்பு மை..!



உதடுகள் கல்லறையாகின்றன
அவள் புன்னகையைப் புதைக்கும் பொழுதும்
அவன் சிகரெட்டைப் புதைக்கும் பொழுதும்

கருத்துகளை அடைகாத்து
பேனாவால் பிரசவிக்கப்பட்டது
கவிதை..!

அதிகமாக உருகுகிறது
வெயில் தாங்காத
ஐஸ் வண்டி ஒலிப்பான்..!

கவிதைப் புத்தகத்தில்
அதிகம் பேசுகின்ற
வெள்ளைக் காகிதங்கள்
மௌனம்..!



மழைத்துளி பதிக்கும்
ஒரு நொடி வட்டத்தில்
ஆயிரம் எண்ணங்கள்..!

கொசுவால் கூட கொளுத்தவன் வீட்டை

நெருங்க முடிவதில்லை
தெருவில் கிடக்கும்
ஏழையின் ரத்தம்தான்
உறிஞ்சப்படுகிறது..!

செடியில் ஒற்றை ரோஜாவையாவது
விட்டுவிடுகிறேன்
பறிக்க முடியாமல் அல்ல
செடியினை விதவையாக்க மனமில்லாமல்..!

## சொல்லுங்கள் பார்க்கலாம் -1

1)ஜெட் விமானம், துப்பாக்கிக் குண்டு – எதன் வேகம் அதிகம்?

துப்பாக்கிக் குண்டு

2)ஒவ்வாமையை அதிக பேருக்கு ஏற்படுத்தும் மருந்து?

பென்சிலின்

3)தாவர செல்லில் மட்டும் காணப்படும் சிறப்புப் பொருள்?

குளோரோபிளாஸ்ட்

4)பாலில் உள்ள முக்கிய தாதுச்சத்து எது?

சுண்ணாம்புச் சத்து

5)உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?

சீனம்

6)முதன்முதலில் கலைக்களஞ்சியம் வெளியிட்ட காடு எது?

பிரான்ஸ்

7)இந்திய மாநிலங்கள் எதன் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன?

மொழி

8)3900 தீவுகளைக் கொண்ட நாடு எது?

ஜப்பான்

9)உலகின் மிக உயரமான நகரம் எது?

வான்சூவான்

10)எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய முதல் இந்தியப் பெண்மணி?

பச்சேந்திரி பால்

11)அமெரிக்க சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு?

1776

12)ஆங்கில வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?

விரீனியபுல் பீடி

13)சாளுக்கிய வம்சத்தின் குறிப்பிடத்தக்க மன்னன் யார்?

இரண்டாம் புலிகேசி

14)தாஜ்மஹால் எந்தக் கட்டிடக்கலையைச் சார்ந்தது?

இந்திய பாரசீகக் கலை

15)கேரளா 100 சதவிகிதம் எழுத்தறிவு பெற்ற நாள் எது?

ஏப்ரல் 18 1991

*p.சொர்ணநந்தினி இரண்டாமாண்டு*

*துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை*